**செய்தி வெளியீடு எண்: 59** **நாள்:14.05.2021**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி**

கொரோனா தொற்று பாதிப்புக்குச் சிகிச்சை பெற்று வந்த சென்னை பல்லாவரம் காவல் உதவி ஆணையர் திரு. ஈஸ்வரன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனையடைந்தேன். பெருந்தொற்றுக் காலத்திலும் தன் கடமையைச் சிறப்பாக ஆற்றி வந்த திரு. ஈஸ்வரன் அவர்களின் மறைவு, தமிழ்நாடு காவல்துறைக்குப் பேரிழப்பாகும்.

திரு. ஈஸ்வரன் அவர்களது மறைவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், காவல்துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்கள வீரர்களாக நின்று கடமையாற்றுவோர் அனைவரும் முன்னெச்சரிக்கையோடும், உரிய பாதுகாப்புடனும் தங்களது பணியை மேற்கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**